2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்–செல்திறன் ஆக்குதல்) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/70).

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்–செல்திறன் ஆக்குதல்) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண் 20/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I move—

"That the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly (names of Members to be furnished later)"

The amendment was duly seconded.

THIRU A. A. SUBBA RAJA: Sir, I move the following amendment—

"That the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly (names of Members to be furnished later)"

The amendment was duly seconded.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே.

(திரு. கே. ஆர். கோவிந்தன் தலைமை)

வரி விதிக்கப்படாத தரிசு நிலங்கள் உட்பட ஒதுக்கப்படாத எல்லா காடுகளும் கிராமங்களின் நலனிற்காக ஊராட்சிகளால் பேணப்படும் பொருட்டு 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு 35-ஆவது சட்டம்) 72-வது பிரிவின் கீழ் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்நிலங்கள் எந்த ஒரு பொதுக் காரியத்திற்குத் தேவைப்பட்ட போதிலும் தண்டனை நடவடிக்கை மூலமாகவன்றிப் பிறவகையில் இவற்றை ஊராட்சிகளிடமிருந்து திரும்பப் பெறுவதற்குச் சட்டத்தில் விதித்துறை எதுவுமில்லை. கட்டடங்கள்

*27—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.